Indi.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
14 DEC 2021
ஊரக வளர்ச்சிப்பிரிவு, தஞ்சாவூர்.

## சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தஞ்சாவூர் மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான ஊராட்சி செயலாளர் திரு.S.தென்னரசு என்பவரின் மகன் திரு.தெ.கோபிநாதன், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை

அரசாணை (4ப) எண்.21 நாள் 12.11.2021.

பிலவ, ஐப்பசி 26,

திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.5006/2019/ந1, நாள்: 01.12.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.27149/2021/டி2, நாள்: 17.08.2021.

.........

ஆணை:

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தில் உம்பளப்பாடி ஊராட்சி

செயலராகப் பணிபுரிந்து 21.11.2018 அன்று காலமான திரு.S.தென்னரசு என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.தெ.கோபிநாதன் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, 07.12.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.தெ.கோபிநாதன் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 06.02.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 15.05.2000 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 18 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு செய்து அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்து இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.தெ.கோபிநாதன் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 07.12.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 26.10.2021-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.18131/ட்டி-1/2021 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அலுவல் சாரா எண்.34017/ஜி.1/2021, நாள்: 02.11.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

K. கோபால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.
திரு.தெ.கோபிநாதன், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, தஞ்சாவூர் மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.

நகல்:

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மை துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

ந.க.எண்.5006/2019/ந1
நாள். .12.2021

மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி)
தஞ்சாவூர்

அரசாணை சார்வு செய்யப்படுகிறது.

பெறுநர்

திரு. தெ. கோபிநாதன்
த/பெ (லேட்) க. தெண்ணரசு
உ.ந.அ. நிலை-II
ஊராட்சி ஒன்றியம்
திருவிடைமருதூர்.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)
தஞ்சாவூர்.

ந.க.எண். 4214/2020/அ1
நாள். 7.1.2022

ஊராட்சி ஒன்றியம்,
திருவிடைமருதூர்.

அலுவலரானை மாறுதல் செய்யப்படுகிறது.

பெறுநர்:

திரு. ஏ. கோவிந்தராஜன்,
ஊர்நல அலுவலர் நிலை-2
ஊராட்சி ஒன்றியம்,
திருவிடைமருதூர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
திருவிடை... புரம்

ரெ. [signature] 7.1.2022

R [signature] 7.1.2022

| தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் முன்னிலை - திரு.ஆர்.வெங்கடேஸ்வரன்,பி.காம்., | |
|---|---|
| ந.க.எண். 5006/ 2019 / ந.1 | நாள். 23-12-2021 |

பொருள்- பணியமைப்பு - ஊரக வளர்ச்சி அலகு - தஞ்சாவூர் மாவட்டம் - பாபநாசம் ஊராட்சி ஒன்றியம்- உம்பளப்பாடி ஊராட்சி செயலராக பணியிடை காலமான தென்னரசு (திரு) S., என்பவரின் மகன் மற்றும் வாரிசு - கோபிநாதன் (திரு) தெ - என்பவர் கருணை அடிப்படையில் ஊர்நல அலுவலர் நிலை-II-ஆக பணி நியமனம் செய்யப்பட்டது- இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

படிக்கப் பட்டவை- 1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 5006/2019/ந1, நாள் 01-12-2020.
2) அரசாணை (4ப) எண்.21 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.அ.5) துறை நாள். 12-11-2021.
3) தொடர்புடைய ஆவணங்கள்.

-------------

ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், உம்பளப்பாடி ஊராட்சி செயலராக பணிபுரிந்து 21-11-2018 அன்று பணியிடை காலமான திரு.S.தென்னரசு என்பவரது மகன் மற்றும் வாரிசு திரு.தெ.கோபிநாதன் என்பவருக்கு முதலாவதாக படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் கருணை அடிப்படையில் ஊர்நல அலுவலர் நிலை-2 ஆக திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) மேலும், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, இளநிலை உதவியாளர் நிலையில் 07.12.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி அரசாணையின் அடிப்படையில் தனியரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 07.12.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

3) மேற்கண்டவாறு தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விபரம் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

23/12/2021

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி), தஞ்சாவூர்.

பெறுநர்
திரு.தெ.கோபிநாதன்,
ஊர்நல அலுவலர் நிலை-2, ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவிடைமருதூர் - உரிய வழியாக.

நகல் - வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ/கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், திருவிடைமருதூர் .
நகல்- ந.1 மற்றும் க.3 பிரிவு இருப்புக்கோப்பிற்கு.

ந.க.எண். 4214/2020/அ1
நாள். 7.1.2022

ஊராட்சி ஒன்றியம்,
திருவிடைமருதூர்.

நகல் சான்று அனுப்பலாகிறது.

7.1.2022

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி ஊ)
திருவிடைமருதூர்

7.1.2022

பெறுநர்:

திரு. எ. கோவிந்தராஜ்,
ஊர்நல அலுவலர் நிலை-2,
ஊராட்சி ஒன்றியம்,
திருவிடைமருதூர்.